Registered as a News Paper in Ceylon
P M G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞூ (1889) ஆனி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10

[புத்-சுஅ] ..... துன்முகி ஞூ பங்குனி ..... வெள்ளிக்கிழமை (22 MAR 1957) [இல-சகூ]

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம்

—o—

புங்குடுதீவு கிழக்கு கலட்டிப் பிள்ளையார் கோவிலில் 8-3-57 வெள்ளிக்கிழமை சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவவதாரம் என்னும் பொருள் பற்றி அராலி திரு. சிவ கந்தையா அவர்கள் ஓர் சிறந்த சொற்பொழிவாற்றினர். பிரசாரகர் சு. சோமசுந்தரம் தொழிற்படும் முறையைச் சுவாமிகளின் சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டு நன்கு விளக்கினர். — கடிதம்

## மண்டல ஆட்சி மன்ற அமைப்பு

இலங்கை முழுவதிலும் இருபத்தொரு மண்டல ஆட்சி மன்றங்கள் Regional Councils அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம். இவற்றுள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ்ப் பகுதிகளில் முதலாம் செயலாய் ஐந்து மன்றங்கள் அமைக்கப்படும். மக்களுக்குக் காணி கொடுக்கும் அதிகாரம் இம் மன்றங்களுக்குக் கொடுக்கப்படும். மகலின் காணி கொடுப்பது பற்றித் தமிழ் மக்கள் மனதிலுள்ள அச்சம் இதனால் நீக்கப்படுமென்று அரசாங்கப் பகுதியினர் கருதுகின்றனர்.

## உலகந்துக்கு அழிவாம்

—o—

வருகிற கிழமை பெரு வெள்ளமும் பூகம்பமும் உண்டாகி உலகம் அழிந்துவிடுமென்று மெக்சிகோ வாசியான ஜேம்ஸ், மனுவேல் போன்டன் என்பார் சோதிடம் சொன்னாராம். இவர் முன்பு சொன்னவை சொன்னபடி நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

## தமிழ்ச் சர்வகலாசாலைப் பேச்சே இல்லை

புத்த குருமார் நடத்தும் "பிரிவேனா" எனப்படும் சிங்கள பாடசாலைகளுக்குச் சர்வகலாசாலை அந்தஸ்துக் கொடுக்க வேண்டுமென்னும் கொள்கை ஒன்று தமது அரசாங்கக் கட்சியாரால் சிறிது காலத்துக்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அக் கொள்கைப்படி இப்பொழுது செயலாற்றுதற்கு மந்திரிசபை கல்வி மந்திரிக்கு அதிகாரங் கொடுத்திருக்கின்றதாம். வித்தியோதய அல்லது வித்தியாலங்கார "பிரிவேனா" உடனே சர்வகலாசாலையாக்கப்படுமாம். இதுபற்றி ஆராய்ந்த மந்திரி சபைக் கூட்டத்தில் தமிழ்ச் சர்வகலாசாலை பற்றிய பேச்சே நிகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தகுருமார் காட்டும் ஆட்சிமுறை

— —

பாடிகாவலர் பகுதித் தலைவராயிருந்து ஓய்வுபெற்றிருக்கும் சேர் றிச்சேட் அலுவிகாரை அவர்கள் இந்த ..... வராக நியமிக்கப்பட்டுள்ளனராம். ஆகிய மனமாற்றி ..... குருமார் கூட்டமொன்றால் கண்டிக்கப்பட்டது. ஆங்கிய தேசியக் கட்சியில் ஒருவராய் இருந்தவர் என்பதும் இவருடைய சகோதரன் சிங்கள மக்கள் முன்னணியை விட்டு ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தார் என்பதும் இவர்கள் கூட்டும் நியாயங்களாகும்.

## பாடிகாவலர் பகுதியிற் பிறர் தலையீடு

— —

பாடிகாவலர் (பொலிசார்) கருமங்களில் யாராயினும் எவ்வித கருமத்திலும் தலையிட்டால் அது ஓர் காகிதக் கோவையில் குறித்து வைக்கப்படுதல் வேண்டுமென்று பாடிகாவலர் தலைவர் பாடிகாவலர் நிலையங்கள் எல்லாவற்றுக்கும் அறிவித்தல் கொடுத்திருக்கின்றார். பாராளுமன்றப் பிரதிநிதிகள், மந்திரிகள் முதலிய யாராயிருந்தாலும் தலையிட்டால் அவர் தலையீடு குறிக்கப்படுமாம்.

## இலங்கை இந்திய பேச்சு

— —

இலங்கை இந்தியர் பிணக்குப்பற்றி இலங்கை இந்திய முதல் மந்திரிகள் வருகிற ஆனி (ஜூன்) மாசம் சந்தித்துப் பேசுவார்களாம். அதற்குமுன் பிரசாவுரிமை விண்ணப்பங்கள் முழுதும் ஆராயப்பட்டு முடிந்து விடலாம் என்று கருதுகின்றனர். குறித்த பிணக்கைத் தீர்ப்பதற்குப் புதுமுறைகள் ஆராயப்படுதல் எதிரில் வரும் இப்பேச்சில் இடம்பெறும்.

## ஆசிய சட்ட அறிஞர் மகாநாடு

ஆசிய சட்ட அறிஞர் மகாநாடொன்று டெல்கிமா நகரில் வருகிற சித்திரை (ஏப்பிரில்) 8-ந் திகதி நடைபெறும். அணிமையில் சுதந்திரம் பெற்ற நாடுகளின் பிரதிநிதிகள் அதிற் பங்குபற்றுவார்கள். அங்கு உலகையும் கட்டுப்படுத்தும் சட்டங்கள் இம்மகாநாட்டில் ஆராயப்படும். இலங்கையின் பிரதிநிதியாய் ஸ்ரீ எச். டபிள்யு. தம்பையா கியூ. சீ. போவார்.

## சனநாயக மகாநாடு

— —

நாவலப்பிட்டியில் ஆயிரக்காய்நகரில் சனநாயக மகாநாட்டு (Democratic Congress) வருடாந்தவிழா நாவலப்பிட்டிப் பாராளுமன்றப் பிரதிநிதி ஸ்ரீ ஆர். இ. ஜயதிலக அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் இலங்கை-இந்தியப் பிரதிநிதிகள் இல்லாமைபற்றி அவர் தமது வருத்தத்தைத் தெரிவித்தார். இந்திய பிரசா உரிமை, தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து ஆகியவை மேலுங் காலதாமசமின்றி வழங்கப்படுதல் வேண்டுமென்னும் கருத்து விழாவில் வலியுறுத்தப்பட்டது.

## நேரு மேனன் வெற்றி

— —

இப்பொழுது நிகழ்ந்த இந்திய பொதுத் தேர்தலில் ஏனைய கொள்கைகளுடன் இந்திய வெளிநாட்டுக் கொள்கைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இக்கொள்கைக்கு முதன்மை வாய்ந்த பொறுப்புடையோர் பண்டித நேரு அவர்களும், ஸ்ரீ வி. கே. கிருஷ்ணமேனனுமாவர். இருவரும் முறையே 193,119 கூடுதலான வாக்குகளாலும் 47,000 கூடுதலான வாக்குகளாலும் வெற்றியீட்டினர். இது அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கையை மக்கள் ஆதரிக்கின்றனர் என்பதற்கு அறிகுறியாகக் கருதப்படுகின்றது.

## தமிழ்ச் சர்வகலாசாலை அமைப்பு

— —

தமிழ்ச் சர்வ கலாசாலை அமைப்பின் ஆரம்பச் செயல் பூர்த்தி செய்யப் பெற்றுள்ளது. உடன்தேவையைப் பூர்த்திசெய்யும் பொருட்டு நாவலர் கழகம் அமைக்கப் பெற்று அதன் தலைமை ஆசிரியராய் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அமைகின்றார். இங்கே இலண்டன் சர்வகலாசாலைப் பரீட்சைக்கு வேண்டிய பாடங்கள் பயிற்றப்படும்.

தளபதி உபசேனாதிபதி ஸ்ரீ ஈ. ஏ. இராசசிங்கம் பதிவுகாரராக அமைகின்றார். பேராசிரியர்கள்: சீ. கே. எலியேசர், பி. கே. சண்முகம், ரீ. நடராசா, கே. கணபதிப்பிள்ளை, ஏ. சின்னத்தம்பி, ஆர். எச். போல், கே. குலரத்தினம் ஆகியோர் பிறசேவைகளிற் பங்குபற்றுவர்.

---

ஆசிரியர் அலை

# குடியேற்றக் கொள்கையை மாற்றமுடியாதாம்!

## சனநாயகப் பிரதமரின் மனப்பான்மை?

தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற இடங்களிலே சிங்கள மக்களைக் குடியேற்றுவது முறையாகும் என்று முதன்மந்திரி கூறியிருப்பதாகச் செய்தி வெளிவந்திருக்கின்றது. வடபகுதி கிழக்குப்பகுதி ஆகிய இடங்களிலே அரசினரின் குடியேற்றத் திட்டங்களிலே இடம்பெறுகின்றவர்கள் அப்பகுதி மக்களாகவேயிருக்க வேண்டுமென்பது சனநாயக முறையாகாதாம். பன்னூறு கணக்கான ஆண்டுகளாக நடந்துவந்த குடியேற்ற முறை கூடாதாம். இன வேற்றுமையை உண்டாக்குவதற்கு இனத்துக்குள் இனவெறுஇனத்தை வல்லடிவழக்காய்ப் புகுத்துவதுதான் சனநாயகமாம்.

தமிழகத்து மக்கள் இந்நாட்டிலே அமைதி நிலவுவதற்கு எவ்வளவு தூரம் முயன்று வந்தாலும் ஆட்சியாளர் வேற்றுமையையுண்டாக்கும் வழிகளைச் செய்த வண்ணமாகவேயிருக்கின்றனர். பிளவையும் பிணக்கையும் உண்டுபண்ணுவது சனநாயக முறை என்று பிரதமர் யாரிடமிருந்து கற்றுக் கொண்டார்? பொதுவுடைமையினருடன் புதுநட்புக் கொண்ட தன்மையாலோ அல்லது புது ஆசிகம் பெற்று மதி அளவு கடந்து பரந்து விட்டதாலோ தெரியவில்லை இந்த விதமான நூதன அரசியற் கொள்கைகளைப் பிரதமர் புகுத்துவது?

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# நாயன்மார் காட்டிய அறநெறி வாழ்க்கை

## மனத்திற் பதியச்செய்தலே முக்கியமான தொண்டு

கடவுள் இல்லையென்று வாதிக்கும் ஒருசக்தி உலவத் தொடங்கும் அளவுக்கு இப்போது எங்கள் நாட்டிலெல்லாம் சமய அறிவு குன்றிவிட்டது. இறைவன் என்ற மையத்தைக் கொண்டு வாழ்க்கையெனும் வட்டத்தை ஆக்குவோமேயானால் அது கோணல் மாணலற்றதாக அழகாய் அமையும்

நாயன்மார் குருபூசைகளையோ அன்னதானங்களையோ தனியே நடத்துவதால் பிரயோசனமெதுவுமில்லை மக்களுக்கு நாயன்மார்கள் காட்டிய அறநெறிகளையும், போதனைகளையும் மனதிற் பதியத்தக்கதாகச் செய்வதுதான் முக்கியமானது. சமுதாயத்தில் சமயவாழ்வு குன்றிப் போன்மையினால்தான் கருத்தற்ற ஒரு வாழ்விற் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது. உலகத்தில் நடப்பதெல்லாம் விசித்திரமானவையாகத்தானிருக்கின்றன. தாவரங்களை எப்படி விஞ்ஞானரீதியில் விருத்தி செய்யலாம் என்று ஆராய்ச்சிநடத்தும் உலகம் அதே நேரத்தில் துரதிஷ்டவசமாக மனிதவர்க்கப் பெருக்கத்தை எப்படித் தடுக்கலாம் என்பதிற் பெரும் முயற்சி செய்கிறது. அவ்வளவு தூரம் மனிதவிருத்தி நாட்டுக்கு உதவாத ஒன்று என்ற எண்ணம் வலுவடைந்து வருகிறது. இத்தப்பான எண்ணங்களுக்கும் முயற்சிகளுக்கும் காரணம் நாட்டில் சமயசிந்தனை குன்றியிருப்பதேயாகும், அதனால் வேற்றுமையும் பூசலும்தான் மேலோங்கியிருக்கின்றன என்று அரியாலைச் சைவத் தமிழ் வளர்ச்சிக் கழகத்திலே குன்றக்குடி அடிகளார் பேசும்போது கூறினார்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

யாழ். துர்முகி௵ பங்குனி௴
௯ ௨ வெள்ளிக்கிழமை


## தலைசிறந்த சைவத் தொண்டன் திரு. மு. சி. இராசரத்தினம்

சைவத் தொண்டே இறைபணி என்ற உண்மை நெறியைக் கடைப்பிடித்து வழிகாட்டி வாழ்ந்து வான்புகழ் பெருக்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சமயம் பரிபாலித்து வந்த அறிஞர்கள் பலர் இவ்வுலக வாழ்வை நீத்தமையால் தமிழகம் துயரத்தில் ஆழ்ந்த வண்ணமாயிருக்கின்ற வேளையில் அத்தொண்டர் குழாத்தைச் சேர்ந்த நியாயவாதி திரு மு. சி. இராசரத்தினம் அவர்களின் மறைவு தாங்கொணாத் ..கத்தை உண்டுபண்ணி விட்டது.

அந்நியர் ஆட்சியும் புறமத விபரீதமும ஈழநாட்டுக்கு வருவித்த இன்னல்கள் பல. அரசியல் மாற்றம் ஓரளவில் நடைபெற்றதாயினும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நிலைமை சீர்குன்றியே விட்டதெனலாம். புறமதம் தமிழகத்திற் புகுதவொண்ணாதென அறிவுரைகளால வீரமுழக்கஞ் செய்த நாவலர் பெருந்தகையார் காட்டிய வழியிற் பின்றொடர்ந்து பொன். இராமநாத வள்ளல், திரு. சு. சிவபாத சுந்தரனார், நியாயவாதி திரு. சு. இராசரத்தினம், திரு. மு. சி. இராசரத்தினம போன்ற பெரியார்கள் சைவமக்கள் வாழ்வாங்கு வாழ்ந்துவரக் கல்வி முறை மத அடிப்படையில் வகுக்கப்படல் வேண்டும் என்று முயன்று சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை உருவாக்கிச் சமய பரிபாலனஞ் செய்யாதிருந்தால் இன்றைய நிலைமை இன்னும் குன்றியிருக்கும். இச் சங்கத்தை நிறுவிய பொழுது உடனிருந்து தொண்டாற்றியவரும் அங்கிலையத்தின் செயலாளராகச் சிறந்த பணி புரிந்தவருமாகிய மு. சி. இராசரத்தினம் அவர்களின் பிரிவைத் தமிழகம் தாங்கமுடியாதென்றே நாம் நினைக்கின்றோம்.

சைவம் இன்றேல் உய்யும் வழியில்லை என்ற எண்ணமே கொண்டவராகத் திரு. இராசரத்தினம் அவர்கள் இந்த வாலிபர் சங்கம சென்ற ....

# திரு. மு. சி. இராசரத்தினம் அவர்கள்

## உணர்ச்சி ததும்பும் பேச்சாளர்

### மெய் வருத்தம் பாராது பசி நோக்காது சேவை செய்த தொண்டன்

வட்டுக்கோட்டை திரு. மு. சி. இராசரத்தினம் அவர்கள் 15-3-57 வெள்ளிக்கிழமை யன்று தமது இல்லத்தில் சொற்ப காலம் அவரைப்பீடித்த நோய்காரணமாகச் சிவபதமடைந்தனர் அடுத்த நாள் அவரது ஈமக்கிரியைகள் சுற்றத்தவர்களும் சிநேகிதர்களும் பிறரும சமுகமளித்திருப்ப அவருடைய புத்திரர்களால் முறைப்படி சிறப்பாக நடத்தப்பெற்றன. அவர் இறக்குமபொழுது வயது 72.

இவர் வட்டுக்கோட்டையில் உயர்ந்த வேளாண் குடியில் முருகேசு சின்னத்தம்பி யென்பவருக்கும அவர்மனைவி அன்னம்மாளுக்கும் புத்திரராகப் பிறந்தவர். இளமையிலேயே சிறந்த விவேகமும் நுண்ணுணர்வும் சிறந்து விளங்கியர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி பயின்ற பின் இந்தியாவல் உயர்தரக் கல்வி பயின்று B. A பரீட்சையில்சித்தியடைந்து சிறிது காலம வட்டுக்கோட்டைச் சைவாங்கில கலாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியவர். பின்பு நியாயவாதப் பரீட்சையில் சித்தி

சேர். பொன். இராமநாதன் அவர்கள் திரு. இராசரத்தினம் அவர்களிடத்தில் மிகுந்த பற்றுடையவர் சேர். பொன். இராமநாதன அவர்களுக்குப்பின் சேர் வைத்துரைசுவாமி யவர்கள் சங்கத்துக்குத தலைவராக இருந்த பொழுது அவருடனும் ஏகோபித்துச் சங்க வளர்ச்சிக்காகப்பாடுபட்டனர். அவர் சங்கக் காரியதரிசிப் பதவியிலிருந்து விலகும்பொழுது சங்கத்தக்கு 10 வித்தியாசாலைகளிருந்தன. 1927 ம் ஆண்டு தொடக்கம் சில வருடங்களாக ஆங்கில இந்துசாதன

ஆசிரியராகக் கடமை யாற்றனர்.

1934-ம் ஆண்டில் பொது நலசேவை அரசியல் கல்வி சம்பந்தமான கடமைகளையும் நியாயதுரந்தர வேலைகளையும் விட்டு விலகிச் சிவபதமடையும் வரையும் ஒரு சன்னியாச வாழ்க்கையை நடத்தி வந்தனர். தமது பிள்ளைகளினதும் பேரப் பிள்ளைகளினதும் நலன்களை அவர் தம் பிற்காலத்தில் ஊக்கமாகக் கவனித்து வந்தனர். சைவ நூல்களில் பெரியபுராணத்தில் இவருக்குப் பெரும்பற்றுண்டு. காலை மாலை கிரமமாகத் தியானஞ்செய்து வழிபாடாற்றுவர். வீட்டுப்பணி உணவு முதலியன முடித்துக் கொண்டு சைவநூல்களைப் படித்து இன்புறவர் இவர் எக்காலத்திலும் புகழை விரும்பவில்லை. இவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத ஒருவர் கேட்டபொழுது அவர் அதற்கு உடன்படவில்லை

திரு மு. மயில்வாகனம

யடைந்து உயர்தர நியாயவாதியாகக் கடமையாற்றினர்.

1925ம் ஆண்டு சைவவித்தியாவிருத்திச்சங்கம் தாபிக்கப்பெற்றபொழுது அவரும் அச்சங்கத்தின் தாபக அங்கத்தவருள் ஒருவராக விளங்கினர். மேற்படி சங்கத்தின் ஆரம்ப காலத்தில் அதன் காரியதரிசியாக மெய் வருத்தம் பாராது பசி நோக்காது ஊக்கமாகக் கடமையாற்றினர். சங்க வளர்ச்சிக் கூட்டங்களில் மிகவும் வேகமாகச் சொற்சோர்வின்றி உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவாற்றுவார். சேர். பொன் இராமநாதன் தான் அக்காலத்தில் தலைவராகக்கடமையாற்றினர்.

பெரும் பங்கெடுத்து அருஞ் சேவை புரிந்ததோடு ஆங்கில இந்துசாதன ஆசிரியராக ஐந்தாண்டுகளாகத் தேசப்பணியும் மதத்தொண்டும் ஒருங்கே திறம்படச் செய்தனர் என்பது யாவரும் அறிந்ததொன்று. வாழ்நாளிற் பெரும் பகுதியைச் சைவததுக்கும் தமிழுக்குமாக உள்ளத்துணர்ச்சியுடன் கழித்துவந்த திரு. இராசரத்தினம் அவர்கள் சென்ற பத்தாண்டுகளாகத் தனிமையாக இறைவனைத் தியானித்து அமைதியான ஆச்சிரம வாழ்க்கை நடத்தி வந்தனர்.

சைவப் பணியும், சிவநினைவுமே வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்ட இப் பெரியாரின் மறைவு ஆற்றொணாதது. எனினும் அன்னாரின் வாழ்க்கைச் செம்மை சைவ மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைதல் வேண்டுமென்று கூறி எங்கள் மனங்கசிந்த அநுதாபத்தைக் குறிப்பிடுகின்றோம.

## 'தமிழ்நாடு' துணையாசிரியர் சொற்பொழிவுகள்

குன்றக்குடி அடிகளார் குழுவினருள் ஒருவராய் "தமிழ்நாடு" துணை ஆசிரியர் திரு. எம். எஸ். பி சண்முகம் அவர்கள் இங்கு வந்திருக்கின்றார். காங்கேசன் துறை நடேஸ்வரக் கலலூரியில் நடந்த அருள்நெறி விழாத் தொடர்பில் "பண்பாட்டின் சிகரம்" என்னும் பொருள்பற்றியும், "உலகின் அடிப்படை" என்னும் பொருள்பற்றியும் சிறந்த சொற்பொழிவுகளாற்றினார். மேலும் பல சொற்பொழிவுகள் ஒழுங்குபண்ணப்படுகின்றன.

உயர்ந்த இலட்சியத்தையும் படாடோபமில்லாத வாழ்க்கையையுமே இவர் விரும்பினர்.

இவருக்கு இப்பொழுது இருபுத்திரர்களும் இருபுத்திரிகளுமுளர். ஒரு மகனும் ஒரு மகளும் இவருக்கு முன்னிறந்தனர் இவருடைய பிரிவு எவருக்கும் மனவருத்தத்தைத் தரக்கூடியது. இவர் ஆன்ம சாந்தியடைவாராக.

—

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## பெரியபுராண வசனம்

### திருநாவுக்கரசு நாயனார் புராணம் I

"தன்னைப்பாடுவான் சம்பந்தன்—பொன்னைப் பாடுவான் சுந்தரன்—என்னைப் பாடுவான் என்னப்பன்" அதாவது திருஞான சம்பந்தர் தம்மையே புகழ்ந்து பாடுவாராம். சுந்தரர்பெண்ணைப் புகழ்ந்து பாடுவாராம். அப்பரோ - அப்பர், திருநாவுக்கரசரின் மறு பெயர்களில் ஒன்று—அம்மையப்பனையே—இறைவனையே புகழ்ந்து பாடுவாராம். இது இறைவன் திருவாக்கு. எனவே, அப்பர் — இறைவனின் அரும்பெருந் தொண்டன் என்பது சொல்லாமலே விளங்கும். முதலில் அவருடைய வரலாற்றுப் பொதுக் குறிப்பைக் கூறுகின்றேன்.

திருமுனைப்பாடி நாட்டிலேயுள்ள திருவாமூரிலே—வேளாளர் குலத்திலே கி. பி. 7-ம் நூற்றாண்டிலே புகழனார் என்பவருக்கும், மாதினியாருக்குப் புத்திரராய் இததரையில் அவதரித்தார். இவருடைய பிள்ளைததிருநாமம் மருணீக்கியார். (பிள்ளைத் திருநாமம் என்பது தந்தைதாயர் இட்ட பெயர்பிறந்தபோது). தருமசேனர் அப்பர் வாகீசர் ஆளுடையவரசர் தாண்டக வேந்தர் என இவருக்கு வேறு பெயர்களுமுள.

இவர் முதலிற் பாடிய பதிகம் "கூற்றாயினவாறு" என்பது. அதனைப் படிக்கிறேன் பாருங்கள்.

"கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபலசெய்தன நானறியேன், ஏற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது வணங்குவனெப்பொழுதும். தோற்றாதென் வயிற்றினகம் படியே குடரோடுதொடக்கி முடக்கியிட, ஆற்றேனடியேனதிகைக கெடில வீரட்டானததுறையம்மானே"

இவர் பாடிய இறுதிப் பதிகம் "எண்ணுகேனென் சொலலி எண்ணுகேனே" என்பது. பாடிய மொத்தப் பதிகங்கள் 49000 இப்போதுள்ளன 311. இவர்பாடிய தேவாரங்கள் 4-ம், 5-ம், 6-ம் திருமுறைகளென வழங்கப்படும்.

அப்பூதியடிகள், சண்டேசர், சோச்செங்கட்சோழன், சாக்கியர், கணம்புல்லர், சம்பந்தர், நமிநந்தியடிகள், அமர்நீதியார், அரிவாட்டாயர் என்பவர்கள் இவராற் சிறப்பித்துப் பாடப்பட்ட ஏனைய நாயன்மாராவர்.

இவர் காலத்திலே சிறத் தொண்டர், திருநீலநக்கர், முருகர், அப்பூதி, குலச்சிறை, மங்கையர்க்கரசி, நெடுமாறர், குங்குலியக்கலயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் நாயன்மார்களிருந்தனர். தமது 81-ம் வயதிலே, சித்திரைத் திங்கள், சதயநாளிலேஇவர் சிவப்பேறடைந்தார்.

### இவ்வுயிர் அவருக்கே உரியது

திலகவதியார் நாவுக்கரசரின் தமக்கையார். சில ஆண்டுகளின்பின்னர் நாவுக்கரசர்பிறந்தார். மருணீக்கியார் என்பது அப்பொழுதிட்ட பெயர். திலகவதிக்கு வயதுநிரம்பிவிட்டது. கலிப்பகையார் என்று ஒருவர். பெரிய சேனாதிபதி புகழனார் மரபிற்கு ஒத்தமரபினையுடையவர். சிவபத்தியிலே சிறந்தவர். திலகவதியைத் தமக்கு மணம் பேசுவித்தார். அவர்கள் உடன்பட்டனர். மணத்திற்கு முன்னர் வடதேசப்போர் ஒன்றுக்குப் போய்விட்டார் கலிப்பகையார். புகழனாரும் மனைவியாரும் தேகவியோகமாயினர். திலகவதியும் மருணீக்கியாரும் உறவினருடன் உறைந்தனர். போருக்குச் சென்ற கலிப்பகையாரும் இறந்துபோய்விட்டார். கேள்விப்பட்டார்திலகவதியார். 'பெற்றார் அவருக்கு என்னை உடன்பட்டமையால் இவ்வுயிர் அவருக்கே யுரியது" தாமும் இறக்கத் துணிந்தார். "அப்படியானால் உமக்குமுன்னர் நான் உயிரை விடுவேன்" என்றார் மருணீக்கியார். இறக்கத்துணிந்தவர் தம்பியின பொருட்டுத் தவம் புரிந்துகொண்டிருந்தார்.

### சமணென வந்த அமண்குழி வீழ்தல்

யாக்கை நிலையாமை செல்வநிலையாமையை மருணீக்கியார் உற்று நினைந்தார். தருமங்கள் பலவும் புரிந்தார். அறச்சாலைகள் தண்ணீர்ப்பந்தல்கள் பூஞ் தொடர்ச்சி 6-ம் பக்கம்

# ஒழுக்கக் கட்டுப்பாடு அவசியம்

—:o:—

முற்றொடர்

செபம் செய்வதில் உரத்த ஒழுக்க முறை வேண்டப்படும். மேல்நாட்டுக் கிறிஸ்துவ மடங்களிலும் இவை நன்கு கவனிக்கப்படுகின்றன. அவர்கள் உபவாசஞ் செய்வார்கள், கண் துயிலாது விழித்திருப்பார்கள், மௌனமாயிருப்பார்கள், தங்கள் நேரம் முழுவதையும் செபஞ் செய்வதிலும் சேவை செய்வதிலும் செலவழிப்பார்கள்.

உடலையும் உள்ளத்தையும், இந்திரியங்களையுங் கட்டுப்படுத்துவதற்கு ஒழுக்கக் கட்டுப்பாடு வேண்டப்படும். சிலர் எக்க நேரமும் உலாவுவதை விரும்புவர். இது இராசத குணத்தாலுண்டாகின்றது. ஒருவர் ஓர் ஆசனத்திலிருந்து தியானஞ் செய்வரேயானால் இவ்விராசத குணம் நீக்கப்படும். கண்களுடன் மனம் ஒரு குறியில் நிறுத்தப்படும்பொழுது மனம் குவிகின்றது. உடல், மனம், இந்திரியங்கள், நாடிகள் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்துதற்கு இவை சாதனங்களாயமையும். இவை தூய்மைப்பட்ட விடத்தில் தியானம் சிறப்புற்றுச் சச்சிதானந்த சொரூபத்திலுறைதல் சித்திக்கும். கடவுள் அல்லது பிரமத்தின் உண்மையில் நம்பிக்கை, பிரமத்திலேயே பேரின்பம் பெறலாகும் என்னும் நம்பிக்கை ஆகியவை உடையவர்களே தெய்விக சாதனைகளிலும் மன அடக்கத்திலும் திடமானவர்களாவார்கள்.

**ஆன்ம சாந்தி பற்றிய இரகசியம்**

ஆன்ம சாந்தியாவது வெளியிற் பெறப்படும் பொருளல்ல. அது பணப் பெருக்கத்தால் அல்லது பெரும கல்வியாற் பெறப்படுவதல்ல. ஆசைகளை அறுத்து 'நான்' 'எனது' என்னும் அகங்கார மமகாரங்களை அறுப்பதனாலேயே அதை ஒருவர் அடையலாம். ஏகாந்தத்திலிருந்தும் அது பெறப்படுவதல்ல. அது யாவரும் அடையத் தககதொன்றுமல்ல. உடல உயிர் வாழ்க்கையின் இன்னல்களை உணர்ந்து, ஐம் பூதங்களாலாக்கப்பட்டு எம் முன்தோன்றும் பொருளகளின் உண்மைத் தன்மை பற்றிய அறிவுடன் வைராக்கியமும் விவேகமு முடையவரே ஆன்ம சாந்தியை அடையலாம்.

**விவேகமும் வைராக்கியமும்**

உண்மையை உணர முயலாதவர், தூய செயல்களைச் செய்யாதவர், இரக்க சிந்தையில்லாதவர், ஆன்ம விசாரணை இல்லாதவர், செபதியானம் செய்யாதவர் வீண் வாழ்க்கை வாழுகின்றார். அவர் அஞ்ஞானத்திலமிழ்ந்தியிருக்கின்றார் நித்தியாநித்திய வஸ்து விவேகமின்மையால் வேண்டிய விளக்கமில்லாது வருந்துகின்றார். அவருக்கு வைராக்கியமும் இலதாகின்றது. விவேகமுடைய ஒருவருக்கு இவ்வுலக இன்பங்களெல்லாம் ஓர் சிறு உணர்ச்சி ஊட்டும் நரம்புக் கிளர்ச்சியேயாகும்; பிறிதாகமாட்டாது.

ஆகையினாலே வைராக்கியத்தையும் சம நோக்கையும் பெற நாம் முயல்வோமாக. அது மனத்தின் ஓர் நிலைமையாகும். அது இல்லாமல் தெய்விக வாழக்கையில் முன்னேறுதல் முடியாதாகும். ஆகையினாலே உடல், மனம், இந்திரியங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தித் தெய்விக வாழ்க்கை வாழ்ந்து வாழ்க்கை இலக்கை அடைய முயல்வோமாக. இஃதே வாழ்க்கையின் நோக்கமாகும். நாங்கள் அகநோக்குடன் ஆராய்ந்து எங்கள் இயல்பான சாந்தி நிலையை அடைவோமாக. நாங்கள் உண்மையை மறந்துவிடக் கூடாது. உபநிடதங்கள் தரும் அதி உன்னத உறுதிப் பொருளாகி இறுதிக் கூற்றகுட 'தத் துவமசி' என்னும் மகாவாக்கியத்தை இவ்விடத்தில் யாவரும் நினைவுகூரச்செய்ய விரும்புகின்றேன்.

# கங்கா நதியின் தெய்வத் தன்மை

—o—

## வெறும் விவேகத்தால் அறியத் தக்கதல்ல

கங்கா நதியின் உற்பத்திபற்றிப் பலர் அறிந்த ஓர் புராணக் கதையுள்ளது. பகீரதன் என்னும் பெயருள்ள பாரதவர்ஷச் சக்கரவர்த்தி இப் பரிசுத்தமான நதியைத் தேவ உலகத்திலிருந்து மக்களுலகத்துக்குக் கொணடுவருதற்குப் பல்லாயிர மாண்டுகளாகப் பெருந் தவஞ் செய்தனரென்று சொல்லுகின்றனர்.

இக் கதையைச் சிலர் சொல்லொடு பொருளாய்க் கொள்ளுகின்றனர்; புதைபொருள பொதிந்த கதையாய் வேறு சிலர் கருதுகின்றனர். நியாயவாத முறையை மேற்கொள்ளும் உலக விவேகமுடையவர்கள், இக்கதையைச் சொல்லும் சொற்களுக்குள்ள வெளிப்படையான கருத்துக்களை ஏற்க மறுத்தார்களானால், நாம அவர்களைக் குறை கூறமுடியாது. புராணக் கதைகளின் வெளிப்படைப் பொருள்களை யாவரும் ஏற்கவேண்டுமென்று விரும்புதல் ஒருபோதும் சரியாகமாட்டாது. ஆராய்ந்தறியாது எதையும் ஏற்கவேண்டுமென்று எங்கள் முன்னோர் யாராயினும் எம்மைக் கட்டுப்படுத்தினதில்லை. கங்கா நதியின் தெய்வத் தன்மைபற்றி மக்கள் மனங்களில் வலியுறுத்துவதே புராணக் கதைகளின் நோக்கம் என்று இக்கால அறிஞர் பலர் சொல்லுகின்றனர். பழைய கொள்கைகளைக் கடைப்பிடிப்போர் இக் கருத்தை வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

இவ்வேறுபாடுகளிருந்த போதிலும் கங்கா நதிக்கும் பகீரதச் சக்கரவர்த்திக்கும் எதுவோ ஒரு தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பதுபற்றியும் பகீரதச் சக்கரவர்த்தி கங்காநதியின் பொருட்டுப் பெருந் தவம் புரிந்துள்ளாரெனபதுபற்றியும் இரு சாராருக்குமிடையிற் கருத்தொற்றுமையிருக்கின்றது. இப்பேருண்மைகளை விட்டுச் சிறு விபரங்கள்பற்றிப் பேசும்பொழுதே கல்விமான்களுக்கிடையிற் கருத்து வேறுபாடுண்டாகின்றது. இத்தகைய ஆபாத்கான கருத்து வேறுபாடுகளில் நான் ஈடுபட விரும்பவில்லை. கங்கா நதி படைப்புக் காலத்திற் பிரமாவினாற் படைக்கப்பட்டதா அல்லது பகீரதச் சக்கரவர்த்தியாற் பின்பு கொண்டுவரப்பட்டதா என்பதில் எது உண்மையானாலும் பொருட்சிறப்பு ஒன்றுதான்.

கங்காநதி என்றால் கடல்கள் வாவிகள் போன்ற வெறும்நீர்நிலையல்ல இறைவனே நீர் உருவத்திலுள்ளார் என்பதே உண்மை. மக்களின் பாவங்களைக் கழுவுதற்கு அவர் இவ்வாறு திருவுருவங் கொண்டுள்ளார். ஆனால் இக் கூற்று உண்மை என்பதற்கு என்ன ஆதாரம்? நம்பிக்கையேயன்றிப் பிறிதொன்றுமல்ல என்பதே இக் கேள்விக்கு மறுமொழியாகும், விவேகத்திலும் நம்பிக்கையே மேலானது என்பது எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். தனி விவேகத்துடன் ஆன்ம ஞான அனுபவத்தையடைந்தார் யாருமே இவ்வுலகிலில்லை.

பக்தி மிகுதியாற் பக்தர்கள் பாடும்பொழுது அவர்கள் அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டு பாடுகின்றார்களேயன்றிக் கல்வியை ஆதாரமாகக் கொண்டல்ல. நம்பிக்கை இல்லாது ஆன்மார்த்தக் குறிகோளையடைதல் முடியாத காரியமாகும்.

கங்காநதியின் புகழைப் பேசுவதிற் புராணங்கள் எப்பொழுதாயினும் சோர்வடைவதில்லை. ஆராய்ச்சி மனப்பான்மையுடையோர் புராணக் கதைகளைச் சொல்லப்படுகின்றவாறு ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் அவற்றில் உண்மையிருக்கின்றதென்பதை யாரும் மறுக்கவும் முடியாது. சாதாரண மக்களுக்குக் கதைகளின் உதவியில்லாமற் பெரும் பெரும் உண்மைகளை விளக்குதல் முடியாத காரியமாகும் அால உதவியில்லாது சூக்குமப் பொருள்களை விளங்க முயலுதல், பாத்திரத்தை உடைத்துவிட்டுத் தண்ணீரைக் கொண்டுபோக முயல்வதை ஒக்கும்.

(ஸ்ரீ தபோவன் மகாராஜ் அவர்கள விஷன் பத்திரிகையில் எழுதிய கட்டுரை ஒன்றின் சாரம்.)

# சமயப் பண்பாட்டின் அவசிய தேவை

—:0:—

## அருள் நெறி விழாவில் குன்றக்குடி அடிகளார் அறிவுரை

—0—0—

சென்ற சனிக்கிழமை காலையில் அகில இலங்கை இளைஞர் அருள்நெறிமன்ற ஆண்டு விழா காங்கேசன் துறை நடேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. குன்றக்குடி அடிகளார் விழாவை ஆரம்பித்து வைத்தார். முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் தலைமை வகிக்க வித்துவான் அ. கனகசபை அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்.

அடிகளார்பேசும்போது நம்முடைய நாடு, மொழி, இனம், சமயம் வருங்கால நிலைமை எல்லாவற்றையும் பார்க்கும்போது இன்றுள்ள சூழ்நிலை வருத்தம் தருகிறது. மனிதனுடைய அறிவியல் வேகமும புறச் சாதனைகளும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அகத்தின்வளர்ச்சி இருந்த இடத்திலேயே இருக்கின்றது. இன்று அறிவியற் சாதனைகள் காலத்தையும் வென்றுவிட்டன. நாடுகள் ஒன்றோடொன்று அன்பை விரும்புகின்றன. பேச்சு என்னவோ ஒன்றுபட்ட உணர்ச்சிதான். ஆனால் ஐக்கியம் பேசிமுடிப்பதற்கு முன்பே அப் பேச்சின் அன்புச் சாயல் முடிந்துவிடுகினறது. இன்று அருள் நெறிக்கு ஒரு சோதனை. மனிதன் வாழ வேண்டுமா என்ற கேள்வி எழுந்திருக்கின்றது. அதிக வேகத்தையும் அதிசயத்தையும் உண்டாக்கி மதத்தைக் காப்பாற்றிவிட முடியாது.

நம் சமய அடிச்சுவடு - பண்பாட்டின் அடிச்சுவடு மாறிவிடாமல் காப்பாற்றப்பட வேண்டும்.

விவிலிய வேதம் ஆண்டொன்றுக்கு 8000 பாதிரிகளை உற்பத்தி செய்கிறது. ஆனால் இந்துசமயம் 1000 பரதேசிகளை உற்பத்தி செய்கிறது என்று குறிப்பிட்டுக் கேட்போர் உள்ளத்துக்கு உணர்ச்சி ஊட்டினர்.

# நேபாள அரசர் வரவு

—o—

## சமாதானத்துக்குச் சார்பான பண்பு

**கொழும்பில்**

நேபாள இந்து அரசர் இராணியுடன் புதன் கிழமை 13-3-57ல் இரத்மலானை ஆகாயவிமானநிலையத்தில் வந்திறங்கினர். தலைமைத் தேசாதிபதி சேர். ஒலிவர் குணதிலகவுடன் கொழும்பு நகரசபைத் தலைவர் முதலியோர் அவரை வரவேற்றனர் கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஓர் வரவேற்புபசாரக் கூட்டம் நடத்தப்பட்டது. அத்தருணம் நகரசபைத் தலைவரின் வரவேற்புரைக்கு மறுமொழி கூறும்போது நாங்கள் சமாதானத்துக்கே சார்புடையவர்களாயிருப்பதற்குத் திடமாகத் தீர்மானித்துள்ளோம். ஆகையினாலே பஞ்சசீலக் கொள்கையை நாம் ஆதரிக்கின்றோம். இக் கொளகையை ஆதரிப்பதனால் உலக சமாதானம் காப்பாற்றப்படுதலாகும் என்று அரசர் கூறினர்.

**கண்டியில்**

நேபாள அரசரும்இராணியும் கண்டிக்குச் சென்று தலதா மாளிகாவில் புத்தரின் புனித சின்னங்களைக் கண்ணுற்றனர். அதன் பின்பு கண்டி நகர மண்டபத்தில வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. சர்வகலாசாலையையும் பார்வையிட்டனர்.

தலதாமாலிகாவவின் புனருத்தாரண வேலைக்கு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# புனிதவதியாரின் புனித வாழ்க்கை முறை

## வாழ்க்கை வளம் பெறுதற்கு வேண்டப்படும் சாதனை

ஸ்ரீ வ. குகசர்மா

நிகழும் பங்குனி மாதம் 6-ந் திகதி செவ்வாய்க்கிழமை காரைக்காலம்மையார் குருபூசைத் தினம் நிகழ்ந்தது. ஆகவே அவ்வம்மையாரைப்பற்றி யாம் இப்பொழுது சிந்தித்தல் சாலச் சிறப்புடைத்தாகும்.

காரைக்கால் என்னும் கவினுறு பதியில் தேவதத்தன் என்றொரு வணிகன் இருந்தான். அவன் முன் செய்த தவப்பயனுக, திருமகளுக்கு நிகரான புனிதவதி என்பவர் பிறந்தார். இவரே காரைக்காலம்மையார் என்னும் பெரும் புகழுக்குரியராயினர். அவர் பிறந்த குடியின் பண்பினுல் தளர்நடை பயிலும் போதும் சிற்றில் விளையாடும்போதும், சிவபெருமானையே மனதில் தியானித்தும் அவர் புகழையே வாயால் பேசியும் வந்தார். அழகுக் கனியாய் அவனியில் வளர்ந்த புனிதவதியாருக்கு மணப் பருவம் வந்தெய்தியது. பெற்றாரும் உற்றாரும் விரும்பியபடி நிதிபதியின் மைந்தன் பரமதத்தனுக்குப் புனிதவதியார் மாலையிட்டார்.

புனிதவதியாரின் கணவனுக்கு ஒருநாள் இரண்டு மாங்கனிகள் கிடைத்தன. அவற்றை மனைவியிடம் வைத்திருக்கும்படி கொடுத்துவிட்டு வியாபாரநிமித்தமாக வெளியே சென்றான். அந்த நேரத்தில் சிவனடியார் ஒருவர் “மூப்புறுதளர் வாலு முதிர்ந்து முடுகிய வேட்கைத்திப்பசியின் நிலையாலும்” புனிதவதியாரின் விட்டைவந்தடைந்தார். விருந்தோம்பலில் விருப்புடையர் தமிழ் நாட்டுப் பெண்கள். அதிலும் வந்தவரோ சாதாரண விருந்தாளியல்ல. தொண்டர். “இறைவரோ தொண்டருள்ளத்தொடுக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே” என்ருர் ஔவையார். அடியாரின் பாதத்தை விளக்கிப் பூசனை புரிந்து முகம் மலர்ந்து இனிய சொற்பேசி இன்னடிசில் படைத்தார் புனிதவதியார். அடியாரின் ஆராப் பசியையும் தளர்வையும் அறிந்து கணவன் வைத்திருக்கும்படி கொடுத்த மாங்கனிகளில் ஒன்றையும் கொண்டு வந்து உண்ணும்படி கொடுத்தார். அடியார் போய் விட்டார். எங்கேயோ சென்றிருந்த கணவன் திரும்பி வந்தான். நல்ல பசி, நீராடி மனை புகுந்தான். புனிதவதியார் அமுதுபடைத்தார். கணவன் மாங்கனியைக் கொண்டு வரும்படி கேட்டான். புனிதவதியார் ஒரு மாங்கனியைக்கொண்டு வந்து கொடுத்தார்; அது மிகச் சுவையுள்ளதாக இருந்தது. எனவே மற்ற மாங்கனியையும் கொண்டு வரும்படி கூறினன். என் செய்வார் புனிதவதியார். சிவனடியாருக்குக் கொடுத்ததைக் கூறிவிட்டால் கணவன் கோபம் கொள்ளக்கூடும் எனப் பயந்தார். மாங்கனி எடுப்பவர்போல அறைக்குட் சென்ருர். வேண்டுவார் வேண்டுதை ஈயும் விடையவரை மனதுட் துதித்தார். புனிதவதியாரின் கையில மாங்கனி ஒன்று வந்திருந்தது. அந்த மாங்கனியைக் கொண்டு வந்து கணவன் கையிற் கொடுத்தார். அவனுக்கு அம்மாங்கனியின் சுவை அமுது போன்றிருந்தது. அவன் மனைவியைப் பார்த்து “முற்றரு மாங்கனியன்று மூவுலகிற் பெறவரிதால் பெற்றது வேறெங்கென்று” பெய்வளையராகிய புனிதவதியாரைக் கேட்டான். புனிதவதியாரின் நிலைமை மோசமாகி விட்டது. முன்பே உண்மையைக் கூறியிருந்தால் இந்த இடைஞ்சல் வராமலிருந்திருக்கலாம். அருளின் திறம் சொல்ல முடியாதது. சொன்னுல் விபரீதம் விளையலாம். ஆனுல் கணவனுக்கு மீண்டும் ஒரு பொய்யைச் சொல்லவும மனம் வரவில்லை. நடந்ததை நடந்தபடி கூறிவிட்டார். புனிதவதியார் நினைத்தது நடந்துவிட்டது “நீ சொல்வது உண்மையாகவிருந்தால் மற்ருேர் மாங்கனியைப் பெற்றுத் தருவாயாக” என்று கணவன் கட்டளையிட்டான். அவர் அவ்வாறே ஒரு மாங்கனியை இறைவனை வே...டிப் பெறறுக் கணவன் கையிற கொ..த்தார் கையிற் கொடுத்தவுடன் மாங்கனி மறைந்துவிட்டது.

அஞ்சிய கணவன் அம்மையாரைவிட்டு நீங்கித் தூரதேசம்போய் அவ்விடத்திலே ஒருவணிகர் குலப் பெண்ணை மணந்தான். சில காலஞ் செல்ல அவர்கட்கோர் பெண் மகவு பிறந்தது. அதற்குப் புனிதவதியார் என நாமமிட்டு வளர்த்து வந்தான். கணவன் பிரிவால் வருந்திய புனிதவதியார் பலநாட்கள் தேடிக கணவன் இருக்குமிடம் அறிந்து சுற்றத்தாருடன் அவ்விடம் சென்றடைந்தார். கணவனே பு..தவதியாரைக் கண்டவுடன் வீழ்ந்து வணங்கினன. இதைக கண்ட சுற்றதார் “மனைவியை வணங்குதல் தகுதியோ” எனக் கேட்டனா. கணவன் முன்பு நடந்தவற்றைக்கூறி இவள் தெய்வமே எனக் கூறினன் புனிதவதியார் மனத்துட் கவலை கொண்டார். “ஒரு கற்புடைய மனைவி அழகுடையவளாக விளங்குவது தனது கணவனுக்காகவேயாகும், ஆனுல் கணவனே என்னை வெறுக்கிருர்” என்று கருதினர். எனவே பேய்வடிவம் தருமாறு சிவபெருமானை வேண்டினர். வேண்டிய வரத்தைப் பெற்ருர். பேய் வடிவந்தாங்கு மம்மையார் விரைவுடன் சிவபெருமானைக் காணுமாசையாற் கைலைமலைப் பாங்கரிற்போய் கைலையைக் காலால் மிதித்தல் கூடாதெனக் கருதி தலையால் நடந்து சென்ருர். இவரது அன்பால் மகிழ்ந்த இறைவன் “அம்மையே யென்னும் செம்மை, யொரு மொழியுலக மெல்லாம் உய்யவே யருளிச் செய்தார்.’ இதனுலே இவர் காரைக் காலம்மையார்என அழைக்கப்பட்டார். இவர் இறைவனிடம் கேட்ட வரம் யாமெல்லாரும் உணர்ந்து உய்தியடைய உதவுவதாகும்.

“இறவாத வின்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு
[கிருர்
பிறவாமை வேண்டும்
மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை
யென்றும்
மறவாமை வேண்டு மின்னு
வேண்டுநான் மகிழ்ந்து
பாடி
யறவா நீயோடும் போதுன்
அடியின் கீழிருக்கவென்
[ருர்”

பொன்னையும் புகழையும் இறைவனருள் விரும்புவோர் விருப்பமாட்டார்கள். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதியாதியன இவரால் பாடப்பட்டவையாகும. இவை பதிஞெராம் திருமுறையில் இடம்பெற்றுளளன திருவாலங்காட்டு மூதததிருபபதிகத்தில் பேயகளின் வர்ணனைகள் அதிகமாகக காணப்படுகின்றன. அற்புதத திருவந்தாதி சிறநத வர்ணனைகள பொருந்தியதாய் இருககிறது.

காரைக்காலம்மையார் சரித்திரமும் அவர் பாடிய பாடல்களும் காட்டும் நல் வழியிலே நாம் நின்று வாழ்க்கையை வளம்படுத்துவோமாக.

---

### தனிச் சிங்களம் உண்டாக்கும் தடுமாற்றம்

மலைநாட்டுப் பகுதிகளில் ஓடும் விசை வண்டிகளில் (பஸ்) ஊர்ப்பெயரெல்லாம் தனிச்சிங்களத்திலாம், விசைவண்டி அலுவலரும் தனிச்சிங்களம்பேசுவோர். இந் நிலைமையில் சிங்களம் தெரியாத தமிழ மககளுக்குப் பிரயாணம் செயவதிற் பெரும் தடுமாறறமுண்டாயிருக்கின்றதாம்.

---

### நேபாள அரசர் வரவு

3-ம் பக்கத் தொடர்ச்சி

அரசர் ரூபா 5,000 நன்கொடை கொடுத்தார்.

**மாத்தளையில்**

மாத்தளை விஜயாகல்லூரிக் கட்டிடத்துக்கு அத்திபாரமிடுதற்கு நேபாள அரசரும் இராணியும் மாத்தளைக்குச்சென்றனர். அங்கே மாத்தளைப் பிரதிநிதி அவர்களை வரவேற்ருர்.

அனுராதபுரம், நீர்கொழும்பு முதலிய பிறபல இடங்களுக்கும் அரசர் செல்கின்ருர்.

### இந்தியாவில் அரசாங்க அமைப்பு

இந்திய பொதுத்தேர்தல் நடந்தபடியிருக்க அரசாங்க அமைப்புக்களும் நடை பெறுதலாகின்றது. ஆந்திரா, அசாம், மத்தியப் பிரதேசம் மைசூர், சென்னை, பாஞ்சாலம், உத்திரப் பிரதேசம், இராஜஸ்தானம், பம்பாய் ஆகிய இராச்சியங்களில் இந்தியதேசிய மகாநாட்டார்அதிஉன்னத வெற்றியீட்டிப் பிறர்உதவியின்றி அரசாங்கம் அமைத்துவிட்டனர்.

கேரளத்திற் பொதுவுடைமையினர் பெரும் வெற்றி ஈட்டியபோதிலும் பிறர் உதவியின்றிஅரசாங்கம் அமைக்க முடியவில்லை.

---

# கோணேசர் மகிமை

—·—:0:—·—

## திருப்பணிக்குதவித் திருவருள்பெறுக

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவல சற்குருநாத சுவாமிகளால் இவ்விலங்கையில் முதல் முதல் எடுத்துப் பேசப் பட்ட தலங்கள் திருக்கேதீச்சரமும் திருக்கோணசலமுமேயாம். இந்தியாவில் சிதம்பரம், காசி முதலியவைபோல் இவ்விருதலமும் முறையே இலங்கையில் அமைந்திருத்தல் ஈழநாட்டின் வைதீக சைவச் சிறப்பைக் காண்பிக்கின்றது. இப்போது இவ் விருதலங்களிலும் திருப்பணி நடைபெற்று வருகின்றது. இதற்குச் சைவ மக்கள் உதவி புரிய வேண்டுமென்பது சொல்லாமலேயமையும்.

.........................

திருக்கோணசலம் சைவ பரமாசாரியராகிய முத்தமிழ் விரகர் திருஞான சம்பந்த சுவாமிகளால பாடப்பெற்ற தலமாகும். இவ்வருட் பாடல் படிககப் படிக்கத் திருவருட் சுவை ஊறும். எம் பெருமானை வர்ணிக்கும் முறையையும் எம்பெருமான். கோயில் கொண்ட இடத்தின் தன்மையையும், சூழல் அமைப்பையும் நீர்வளம் நிலவளம மிருகங்கள் பட்சிசாலங்களின் தன்மைகளையும்ஞானக்கண்ணுல் தரிசித்து இராமேஸ்வரத்திலிருந்து அவர் பாடினுர். இந்தத்தேவாரப் பதிகம் ஒப்பற்ற சிறப்பு வாய்ந்ததா யிருக்கின்றது. இத்தகைய தேவாரத்தை மாணவர்களன்றி எல்லோரும் மனனம் செய்து கொள்ளவேண்டும். ஆண்டுக்கொரு முறை யாழ்ப்பாணத்திலிருந்தும் வேறு பல இடங்களிலிருந்தும் பல்லாயிரக கணககான அடியார்க சந்நியாசிகள் கால்நடையாகக் கதிர்காமத்துக்கு யாத்திரை செல்வார், அவர்கள் எல்லோரும் ஒரு வாரம் திருக்கோணமலையில் தங்கிச் செல்வார்கள். அப்பொழுது இவ்வடியார்கள் எல்லோரும் கோணேசப்பெருமானைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்து, வழிபட்டே கதிர்காமம் செல்வர். திருக்கோணமலையில் சைவ மக்கள் குறைவாக இருந்தாலும் அடியார் சிவ பக்திகளிற் சிறந்தவர்கள் பலர் இருக்கிருர்கள். இற்றைக்குப் பல வருடங்கட்குமுன் சைவப் பெரியார் ஸ்ரீமத் சிவபாத சுந்தரனுர், ஸ்ரீமத் நாகலிங்கப் பரதேசியார் ஸ்ரீ சங்கர சுப்பைய சுவாமி ஸ்ரீ சடவரதசுவாமி, ஸ்ரீமத் விபுலானந்தஅடிகள முதலான பெருமக்களும் வேறு பல பெரியார்களும் இத் தலத்திற் சைவப பிரசங்கங்கள் செய்துள்ளார்கள். இதன் பயனுகச் சில இந்துசபைகளும் தோன்றியிருககின்றன. இது நிற்க, கோணசலம் தென் கைலாசம் எனவும் சொல்லப்படும். இதனை மனு நீதிகண்ட சோழனது திருக்குமாரராகிய வரராமதேவ சோழர் (வீதி விடங்கள்) முதன் முதல் கட்டுவித்ததாகச் சதக நூல் கூறுகின்றது. இவருக்குப் பின் இவர் புதல்வர் குளக்கோட்டு மகாராசா திருப்பணிகள் புரிந்து திருவாரூருக்குப் போகாது இத் தலததிலேயேயிருந்து முத்தியடைந்ததாகவும் சரித்திரம் கூறுகிறது. இத்தலத்திற்குப் பல பெயர்கள் உண்டு. அவை தட்சண கைலாசம் இமாசல கைலாசம், மேரு கைலாசம், மந்தர கைலாசம், உ..தர மகா கைலாசம் என்பன. இத் தலத்தின் விரிவை யாழ்ப்பாணம் ம. க. வேற்பிள்ளைப்புலவர் அவர்கள் இயற்றிய ஈழமண்டல சதகநூலில் சைவ மக்கள் கண்டுகொள்க. அதில் இத்தலத்தைப்பற்றி திட்பநுட்பமாகப் புலவர் அவர்கள் வியந்து பாடியுள்ளார்கள். ஈழத்துச் சைவ மக்கள் எல்லோரும் இத் தலத்தைத் தரிசித்து அங்கே நடக்கும் திருப்பணியை நிறைவேற்றிக் கோணேசப் பெருமானது திருவருளைப் பெற்று இன்புற்று வாழ்வார்களாக.

# சைவ வித்தியா விருத்திச் சேவை செய்த பெரியார்

———:o:———

## திரு எம். எஸ். இராசரத்தினம் அவர்கள் பிரிவு

திரு முருகேசு சின்னத்தம்பி இராசரத்தினம் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துச் சென்ற வெள்ளிக்கிழமை எம்மை விட்டுப் பிரிந்தார் என்னுஞ் செய்தியை அறிந்து வருந்துகின்றோம். இவருக்கு இறக்கும் பொழுது வயது 72. மூன்று புத்திரரையும் மூன்று புத்திரிகளையும் அவர் உடையவராயிருந்தார். ஆனால் அவர்களுள் புத்திரர் இருவரும் புத்திரிகள் இருவருமே இன்று எம்முடன் வாழுகின்றனர்.

இவர் உயர்தரக் கல்வி கற்றுச் சட்டத் துறையிலும் தகுதியுடையராகச் சிறந்த நியாயவாதியாய் விளங்கினர். இவர் செய்த சேவைகள் பலப்பல. இவர் செய்த எவைதயும் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் செய்து நிறைவேற்றினர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை அமைக்கும் சேவையில ஈடுபட்ட பெருமக்களுள் இவரும் ஒருவராவர். அமைத்த அளவில் நின்றுவிடாது அச்சங்கத்தின் செயலாளராகம் பல்லாண்டுகள் பெரும் பணி புரிந்தார். இத்தகைய சேவை செய்யும் துறையிற் பெரும் எதிர்ப்புக்களும் இடையூறுகளும் அக்காலத்தில் உண்டாயின. அவை எல்லாவற்றையுந் திரணங்களாக மதித்து அவற்றை வென்று தாம் மேற்கொண்ட கருமத்தை முன்னேற்றினர். இடையூறுகளும் எதிர்ப்புக்களும் மிகுந்த அக்காலத்திற் செய



லாற்றுச் செயலாளர் பதவியிலிருந்து நீங்கும்பொழுது அறுபது சைவப் பள்ளிக்கூடங்களை உருவாக்கித் திறம்பட நடத்தினரென்றால் அவருடைய உளத் தூய்மையையும், ஆர்வ மிகுதியையும் செயலாற்றுந் திறனையும் ஓர் சிறு சொற்களைவை மூலம் பொருத்தமான முறையிற் பாராட்டுவதென்பது முடியாதாகுமென்பதை அக்கால நிலைமையை அறிந்த யாவரும் ஏற்றுக்கொள்ளுவர்.

அவர் இந்துசாதன ஆங்கில இதழின் ஆசிரியராக 1927-ம் ஆண்டு தொடக்கம் 1931-ம் ஆண்டு வரையில் தொண்டாற்றினர். அறிவுப் பெருமைக்கும் சக்தி நிறைவுக்கும் அறிகுறியாய் மிளிரும் அவருடைய ஆசிரிய உள்ளக் கிடக்கைகள் வாசகர்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளுந் தன்மையவாய் விளங்கின. அவ்விதழ்களை இன்று பார்த்தாலுமே அவை அன்றுபோல் இன்றும் உயிர்ப்பு மிகுதிகாட்டுகின்றன.

இம் என்ன முன்னமே எங்கும் இந்து வாலிபர் சங்கங்கள் அமைப்பதிலும் திரு. எம். எஸ். இளையதம்பி முதலியோருடன் ஈடுபட்டு ஒப்புயர்வில்லாச் சேவை செய்தார். அச்சங்கங்கள் அக்காலத்தில் அளப்பருஞ் சேவை செய்து அறிவுக்கதிர் பரப்பினன. சேர் பொன்னம்பலம் இராமநாதன் போன்ற பெருமக்களுடன் பக்கபலமாக நின்று தேசத் தொண்டாற்றினரென்றால் அவர் செய்த தொண்டின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா?

இவ்வாறு தேசத் தொண்டு செய்தற்கே பிறந்தாரெனப் பாராட்டத்தக்க இப்பெரியார் பிற்காலத்திற் புறம்பேத சேவை செய்யுந் துறையிலிருந்து நீங்கி அகநோக்குடன் இறை வழிபாடு செய்து வாழ ஆரம்பித்தார். அவ்வாறு அமைதியுடன் வாழ்ந்து இறைவன திருவடி நீழலில் இன்புற்று வாழுங் குறிப்புடன் இவ்வுலக வாழ்வை நீத்தார் பெருமை பிறங்குபு இப்புண்ணிய சீலருக்கு இறைவன் திருவடி நீழலில் என்றுங் குன்றுப் பேரின்ப வாழ்வு எய்துவதாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## மாணுக்கர் மதிவள மன்றம்

——

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சோலைகள் குளங்கள் எல்லாம் ஆக்கினர் தமக்குள்ளவற்றையுந் துறந்தார் துறவியாய்விட்டார். உண்மைச்சமயம் எது? என்று உணர முடியவில்லை அவருக்கு. பாடலிபுத்திரத்துக்குப் போனர். சமணரது போதனைசததியினல் ஆருகத சமயத்தில் ஆழ்ந்தார். சமணநூல்களையெல்லாங் கற்று மகாபண்டிதரானர் சமணர்கள் தருமசேனர் என்று அவருக்குப் பெயர் இட்டனர். பௌத்தர்களை வாதில் வென்று ஆருகத மதத் தலைவரானர். பல்லவர் தமிழ்நாட்டில் கி பி 3-ம் நூற்றாண்டு முதல் 9-ம் நூற்றாண்டுவரை ஆட்சி புரிந்தனர் எனச் சரிததிரம் கூறும்.

## அரசியல் அலை

——

1 -ம் பக்கத் தொடர்ச்சி

### நிதிப் பகுதியை நெருக்குவதேன் ?

புத்த கோயிற்பாடசாலையினைப் பல்கலைக் கழகமாக்க வேண்டுமென்று ஒற்றைப் பிடி பிடிக்கின்ற மந்திரி தகநாயக நிதிப் பகுதி அலுவலகத்தை நெருக்குவதெதற்காக? பாடிகாவலரைப் பயமுறுத்துவதுபோல நிதிப் பகுதி அலுவலாளர் மீதும் மிதிக்கப் பார்க்கின்றார் மந்திரியார்.

# இந்தியத்தேர்தல் வெற்றி விபரங்கள்

———:o:———

### சட்ட சபைகள்

| மாகாணங்கள் | மொத்த இடங்கள் | ஒரு கட்சி ஆட்சிக்கு வேண்டிய இடம் | முடிவு தெரிந்த தொகை | இந்திய தேசிய (காங்கிரசு) மகாநாடு | பொதுவுடைமை | மக்கள் சமூகம் | ஜன சங்கம் | பிற கட்சிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| * தமிழ்நாடு | 205 | 103 | 205 | 151 | 4 | 2 | | x 48 |
| கேரளம் | 126 | 64 | 124 | 42 | 59 | 9 | | 14 |
| * மைசூர் | 208 | 105 | 204 | 147 | 1 | 18 | | 38 |
| * அசாம் | 108 | 55 | 106 | 71 | 4 | 8 | | 24 |
| ஒரிசா | 140 | 71 | 130 | 52 | 7 | 11 | | 60 |
| * பம்பாய் | 396 | 199 | 38[illegible] | 225 | 13 | 35 | 3 | 10 |
| * ம.பிரதேசம் | 288 | 145 | 288 | 231 | 2 | 12 | 10 | 33 |
| பிகார் | 318 | 160 | 257 | 159 | 7 | 26 | | 65 |
| * உ.பிரதேசம் | 430 | 16 | 404 | 267 | 9 | 42 | 16 | 70 |
| * பாஞ்சாலம் | 154 | 78 | 148 | 115 | 6 | 1 | 9 | 16 |
| * இராசஸ்தானம் | 176 | 89 | 156 | 104 | 1 | 1 | 6 | 44 |
| மே. வங்கம் | 252 | 127 | 174 | 108 | 33 | 17 | | 16 |

x தி. மு. க. வெற்றி 15 இதில் அடங்கியுள்ளது.

### மக்கள் சபை

தெரிவு செய்யப்பட்ட தொகை 360. இந்திய தேசிய மகாநாடு 271. பிற 89.

* ஆந்திரா ஒன்பது இராச்சியங்களில் தேசிய மாநாட்டுக்குப் பூரண வெற்றி.)

# உங்கள் நக்ஷத்திரம் ?

எங்கள் சோதிடம் — ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது

இவ்வாரப் பலன்கள் 24—3—57 —— 30—3—57 ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

குடும்பச்சூழலில் இந்த வாரம் தொந்தரவுண்டாகும் நிகழ்ச்சிகள் சில நிகழும். உத்தியோக கருமங்களும் அதிகம் நல்லாயிருக்கமாட்டா. தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும். கண்நோய்களுக்கிடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வாரத்தின் முதல் இரு நாட்கள் மிகவும் விரும்பத்தககவையாயிருக்கும். நீர் அதிக கண்டனத்தை முன்னிடவேண்டி வரும். வாரமிகுதி நல்லாயிருக்கும். நண்பரும் இனத்தவரும் அதிக உதவியாயிருப்பர்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, ம் பாதம்.

ஞாயிறும் திங்கள்காலையும் புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். திங்களபிற்பகல் செவ்வாய் புதன் தொந்தரவானவையா யிருககும். வாரமிகுதி திரும்பவும் நன்றாகும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

முன் அரைவாரம் ஒரு அளவுககு நல்லாயிருககும். ஆரம்ப இடையூறுகளின்பின்பே வெளினும் புது முயற்சிகள் நல்ல பலனை ததரும். புதன் பிற்பகல் வியாழன் வெளளி கவனமாய்க் கழிககவேண்டும். வார இறுதி நல்ல புதினங்களைத் தரும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.

வெள்ளி இரவும் சனியும் தவிர இந்தவாரம் நல்லதாயிருக்கும் புது முயற்சிகள் சித்தியடையும் வாரஇறுதியில் சுகவீனங்களுக் கிடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்பக்குழப்பங்களுக்கு இந்தவாரம் இடமுண்டு மனச்சமாதானமிருககமாட்டாது. பணத்துறையில் நல்ல வருவாயைப் பெறுவீர். ஆனல் முழுவதையும் செலவழித்து விடுவீர். வார இறுதியிற் கமத்தொழிற் சித்தி நிச்சயம்.

**துலாம்** சித்திரை 3 4ம், பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

போட்டியிடுவோரை வெல்லுதல் இந்தவாரம் நிச்சயம் நீர் சில பழைய கடன்களைத் திரும்பிப் பெறக்கூடியதாகும். மனச்சஞ்சலங்களுககும் குடும்பக் குழப்பங்களுக்கும் வாரவிறுதியில் இடமுண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உம்முடைய கருமங்களில் சில தீர்மானங்கள் இவ்வாரம் விரைந்து செய்யவேண்டிவரும். நீர் சித்தியடைய வேண்டுமானல் கண்டனங்களைக் கவனியாது கருமங்களை முன்னேற்றுக. வார இறுதியில் சிலகுடும்பக குழப்பங்களுக் கிடமுண்டு,

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

இந்த வாரம் இடைஞ்சல்களிலிருந்து நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். எதிரிகள் அழிவுககிடமுண்டு. மாதாவழி இனத்தவர் உமக்குச் சில துன்பங்கள் உண்டாகக் கூடும் அல்லது மாதாவுக்குச் சுகவீனம் உண்டாககூடும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம 1, 2ம் பாதம்.

உம்முடைய கருமங்கள் பலவற்றில் இந்த வாரம் விரைவான முன்னேற்றம்நிச்சயம், நெருக்கடி குறையும். தனலாபமும் புகழும் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

பணநெருக்கடிகள் இந்தவாரம் குறையும். புதுமுயற்சிகளிற்சித்தி நிச்சயம். வாரஇறுதியில் இனத்தவர்களுடன் சில சண்டைகளுக் கிடமுண்டு. அபாயங்களையும் தவிர்க்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

கமத்தொழில் முயற்சிகளில் இந்தவாரம் சித்தி நிச்சயம். பிதாவழி இனத்தவர் சில தொந்தரவு உண்டாக்குவர். வார இறுதியில் நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்ககவும். பணத்துறையில் நல்ல வாரம்.

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


# ஓர் வேண்டுகோள்

## சிதம்பரம்
## ஸ்ரீ நடராசப்பெருமான் திருக்கோயில்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தன்மேலாம்
சிற்பரவி யோமமாகுந் திருச்சிற்றம்பலத்து ணின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

பஞ்சலிங்கத் தலங்களுள் ஆகாசலிங்கத் தலமாக எங்கள் தாய் நாடாகிய பரதகண்டத்தின்கண் விளங்குவது தில்லையாகும் இது சோழநாட்டிலுள்ளது. எங்கள் உடம்பிற்கு இருதயம்போல இவ்வண்டத்துக்கு இருதயமாக விளங்குவது இத்தலம். இத்தலம் தரிசிக்க முத்தி கொடுப்பதாகும். கோயிற் புராணம், சிதம்பர புராணம், தில்லைவன புராணம், ஏமசபாநாதபுராணம், புண்டரீக புராணம் முதலிய புராணங்களில் இந்தத் தலத்தின் மான்மியங்களை பரக்கக் காணலாம். சிவஸ் தலங்களுள் கோயில் என்ற சிறப்புப் பெயரைக் கொண்டழைக்கப்படுவது இத்தலமேயாகும்.

தேவர்கள் வியாக்கிரபாதர் பதஞ்சலி முனிவர் திருமுறையாசிரியர்கள் வேந்தர் அமைச்சர் முதலிய யாவரும் இத்தலத்தின்கண் நடராசப்பெருமான் புரியும் ஆனந்தக்கூத்தினைத் தரிசித்து இம்மை மறுமை யின்பங்களை யடைந்தனர்.

இந்தத் தலத்தில் ஸ்ரீநடராசப்பெருமான் மக்களுக்குத் தரிசனமளிப்பதற்கு ஐந்து அவைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று பிரசித்தி பெற்ற ஆயிரக்கால் மண்டபமாகும் ஸ்ரீ நடராசப் பெருமான் தமது அருட் சக்தியாகிய சிவகாமியம்மையாருடன் அடியார்களுக்கு ஒவ்வொரு வருடமும் இருமுறைகளில் ஆனி உத்திரத் திலன்றும் மார்கழித் திருவெம்பாவைப் போதிலும் இம்மண்டபத்தில் தரிசனம் அளிப்பார் இம்மண்டபம் மூன்றாவது குலோத்துங்க சோழ ராசாவினால் இரண்டாவது நூற்றாண்டில் புதுப்பிக்கப்பட்டதெனக் கூறப்படுகின்றது. தெய்வச் சேக்கிழார் தமது 'பெரிய புராணம்' என்னும் சைவத் தெய்வப் புராணத்தை இவ்வாயிரக்கால மண்டபத்திலிருந்து இயற்றினாரெனவும் அழியாப் புகழ்படைத்த பதஞ்சலி முனிவர் தமது வியாகரண மகா பாஷ்யப் பாடத்தை தமது ஆயிரம்சீடர்களுக்கு இங்கிருந்தே உபதேசஞ் செய்தாரெனவும் சொல்லப்படுகின்றது அடியார்கள் சமய சம்பந்தமான விஷயங்களையும் தத்துவ சாஸ்திரங்களையும் இம் மண்டபத்தில் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். 310 அடி நீளமும் 140 அடி அகலமும் கொண்டுள்ள இம் மண்டபம் இப்பொழுது பல பாகங்களில் பழுதடைந்திருக்கின்றது. சிதம்பராலயத்தின் மற்றைய பாகங்களில் வேண்டிய திருத்தங்களைச் செய்து, சென்ற 1955ம் ஆண்டு ஜூலாய் மாசம் 7-ந் தேதி சபபுரோக்ஷண மகாகும்பாபிஷேகத்தை அத் தலத்தில் செய்தற்கு உதவியாகவிருந்த ஸ்ரீ சபாநாயகராலய புனருத்தாரணச் சபை திருவருளை முன்னிட்டு இம் மண்டபத்தைத் திருத்தி புனருத்தாரணஞ் செய்ய முன்வந்திருக்கின்றது

இத் திருப்பணிக்கு ஏறக்குறைய 2 இலட்சம் ரூபா தேவையாயிருக்கிறது. ஈழநாட்டிலுள்ள சிவனடியார்கள் இத்திருப்பணிக்குப் பணம் அனுப்புதல் சிறந்த சிவபுண்ணியமாகும். இக்கால அரசாங்கக் கட்டுப்பாடுகளின்படி அவர்கள் தனித்தனி பணம் அனுப்புதல் மிக்க கஷ்டமாயிருக்கும். இத் திருப்பணிக்குத் தங்களாலியன்ற பணமுதவ விரும்புகின்றவர்கள் தங்கள் பணத்தினை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தனாதிகாரிக்கு அனுப்பி வைத்தால் அவர் அரசினரிடம் உத்தரவுபெற்றுச் சேரும் பணத்தை ஒரே தொகையாக ஸ்ரீ சபாநாயகராலயப் புனருத்தாரணச் சபைத் தனாதிகாரிக்கு அனுப்பி வைப்பார். ஆனபடியால் அன்பர்கள் தங்கள் பணத்தைச் கணக்காது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தனாதிகாரிக்கனுப்பி வைப்பார்களாக.

சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
5-3-57,

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்.

M, 482 5-3-57

## வெள்ளி நாணயம்

வருகிற மாசம் காகிதக் காசுக்குப் பதிலாய் ஐந்துரூபா வெள்ளி நாணயத்தல் வெளிவருமாம். ஒரு ரூபா போலி வெள்ளியாலாக்கப்பட்டு அத்துடன் வெளிவரும்.

## சிங்கள ஆட்சிக்கு அறிகுறி

வடபகுதியில் தண்ணீர் வசதி செய்யும் பொருட்டுப் பல குளங்களை நிலமந்திரி வெட்டத் திட்டமிட்டிருக்கின்றாராம். அவற்றுள் ஒன்று யாழ்ப்பாணத்தில் வெட்டப்பட்டு ஸ்ரீ பண்டாரநாயகவின் மகளுடைய பெயரும் அதற்கு இடப்படுமென்று கூறப்படுகின்றது.

## யாழ்ப்பாண நகரசபையின் தமிழ்த் தீர்மானம்

யாழ்ப்பாண நகரசபையார் உபயோகிக்கும் காகிதங்கள் காகித உறைகள் எல்லாம் தமிழில் அச்சிடப்படுதல் வேண்டுமென்று யாழ்ப்பாண நகரசபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாம். உள்நாட்டு அரசாங்கப் பகுதிகளில் தமிழ் மொழி ஆளப்படலாமென்ற கொள்கையைச் சாதிப்பதற்காக இத் தீர்மானம் செய்யப்பட்டது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: 11335,

துரையப்பா கந்தசாமி, மானிப்பாய் தெற்கு —வழக்காளி

எதிர்

அந்திரேசு ஐயன் கொக்குவில் மேற்கு —எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11335-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1957ஞு வைகாசி ௴ 6௳ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் தீர்வைத்தொகை ரூபா 1596. 1-7-54 துவக்கம் 23-8-56 வரைக்கும் ரூபாய் 1200 க்கு 12 வீதவட்டியும் கூட்டி தீர்வைத் திகதி தொடக்கம் பணக்கொடுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 276.42.

காணி விபரம்:

யாழ்ப்பாணம் கொக்குவிலில் மந்திப்புலம் என்னுங் காணி விஇலா 3 குளி 15. வீடும் குசினியும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு: ஒழுங்கையும் சின்னப்புபெண் அன்னப்பிள்ளையின் ஆதனமும் வடக்கு: சின்னவன் சடையனின் ஆதனம், மேற்கு: சின்னவன் ராசாவின் ஆதனமும் பங்காளரும் தெற்கு: பிச்சுக் குருக்கள் குமாரசாமிக் குருக்களின் ஆதனம். இவை யடங்கலும்.

வ. அ. துரையப்பா,
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்,
18-3-57

M. 493, 22-3-57, (ரு. 100)


# 6000 மைல் சுற்றுப்பிரயாணம்

## —இந்தியாவில் 35 நாட்கள்—

குறைந்த செலவு நிறைந்த வசதி

**சயன — போசன — ஸ்நான வசதிகள் உள்ள
புகையிரத வண்டியில் 2500-ம் ஆ.
புத்த ஜயந்தி மலிவுச் சீட்டு**

திருச்சி, பங்களூர், மைசூர், பூனா, பம்பாய், எல்லோரா, அஜந்தா, ஸாஞ்சி, ஆக்ரா டெல்கி — மதுரா, பிருந்தாவனம், லக்னோ, கான்பூர், அலகபாத், பனாரஸ் (காசி), கயா, கல்கத்தா, சித்தரஞ்சன், பூரி, மதராஸ் முதலிய இடங்கள்.

கட்டண விபரம்

(இரு நேர தாவர போஜனம் உட்பட)

| | |
|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா 625-00 |
| இரண்டாவது வகுப்பு | 475-00 |
| மூன்றாவது வகுப்பு | 325-00 |

புறப்படும் தேதி இலங்கையிலிருந்து 15-4-57

(விண்ணப்பம் 24-3-57 ன் முன்பே சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

முழு விபரம்:

**விவேகானந்தா டிரேட்ஸ் கோர்ப்பரேஷன்**

(பிரயாண வசதி செய்பவர்கள்)

31, கே. கே. எஸ் ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

(பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம்)

தந்தி: "SRIVEL"


## கைத்தொழிற் பயிற்சியில் தமிழருக்கு இடமில்லை

மகாறகமவிலுள்ள அரசாங்க ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் உள்ள கைத்தொழிற்பயிற்சிப் பகுதியில் சிங்கள மொழி அறிவில்லாதோருக்கு இடமில்லையாம். இக்கட்டுப்பாட்டினால் தமிழ் மக்களுக்கு இங்கிலையத்தில கைத்தொழிற் பயிற்சி மறுக்கப்படுகின்றது.

## திருக்குறளில் முஸ்லிம்கள் ஆவல்

கண்டியில் இந்துசனிஷ்ட பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற திருக்குறட் போட்டிப் பரீட்சையில் 46 மாணவர் பங்குபற்றினர். இவர்களுள் 43 பேர் முஸ்லிம்களென்பது குறிப்பிடத்தக்கது.






வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் நாவலர்வீதி 215-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 22-3-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.